செ.வெ.எண்:534 நாள்: 19.08.2019

**தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் அரசு மருத்துவமனைகளில் 1,000 டயாலிசிஸ் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளது.**

**மருத்துவத்துறையில் தமிழகம் மகத்தான சாதனைகளை படைத்து வருகிறது.**

**இலுப்பூர் அரசு மருத்துவமனையில் டயாலிசிஸ் மையத்தை திறந்து வைத்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

---------------------------------------------------------------------------------------------

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் அரசு மருத்துவமனையில் ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட புதிய டயாலிசிஸ் மையத்தினை திறந்து வைத்து, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 14 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.12 இலட்சம் மதிப்பீட்டில் விலையில்லா காதொலி கருவிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (19.08.2019) வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

தமிழகம் முழுவதும் டயாலிசிஸ் சிகிச்சையை விரிவுபடுத்தும் வகையில் ஏற்கனவே அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் இருந்த டயாலிசிஸ் சிகிச்சையினை தாலுகா மருத்துவமனைகள் மற்றும் தாலுகா அல்லாத அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்த தமிழக அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு தலைமை மருத்துவமனைகள், தாலுகா மருத்துவமனைகள் மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனைகளிலும் டயாலிசிஸ் சிகிச்சை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் அரசு மருத்துவமனைகளில் மட்டும் 1,000 டயாலிசிஸ் கருவிகள் அமைக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சிறுநீரக கோளாறு உள்ளவர்கள் ஏற்கனவே அதிக தூரத்தில் உள்ள நகரங்களுக்கு சென்று டயாலிசிஸ் செய்யும் நிலையை மாற்றி அவர்கள் இருக்கும் இடங்களிலேயே உள்ள அரசு மருத்துவமனைகளில் டயாலிசிஸ் கருவிகள் அமைக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்படுவது சிறுநீரக நோயாளிகளுக்கு மிகுந்த பயனுள்ளதாக அமையும்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே தனியார் மருத்துவமனைகளில் அதிக அளவில் டயாலிசிஸ் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. ஆனால் அரசு மருத்துவமனைகளில் 2 சதவீதம் டயாலிசிஸ் சிகிச்சை என்ற அளவில் இருந்தது. தற்பொழுது தமிழகம் முழுவதும் 1,000 டயாலிசிஸ் கருவிகள் தாலுகா மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனைகளிலும் அமைக்கப்பட்டுள்ளதால், கிராமப்புறங்களில் உள்ளவர்களும் தங்களது பகுதிகளிலேயே டயாலிசிஸ் சிகிச்சைகள் மேற்கொள்வதால் தற்பொழுது அரசு மருத்துவமனைகளில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் டயாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்பவர்களின் எண்ணிக்கை 19 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது தமிழக சுகாதாரத்துறையின் சிறப்பான மருத்துவ சேவைக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

எலிபேஸ்ட் சாப்பிட்டவர்களை குணப்படுத்துவது மருத்துவர்களுக்கு சவாலான ஒன்றாகும். எலிபேஸ்டை தடை செய்வது மக்கள் நல்வாழ்வுத்துறையால் மட்டுமே இயலாது. அரசின் பிற துறைகளின் மூலம் தடை செய்ய வேண்டும். இதுகுறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு எடுத்து சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் தற்கொலை எண்ணத்தை தடுக்கும் வகையில் மாநில அளவிலான கருத்தரங்கம் நடத்தப்பட உள்ளது. இதன்மூலம் தற்கொலை தடுக்கும் வகையில் போதுமான விழிப்புணர்வை ஏற்படுத்த தமிழக அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது. இதுபோன்ற நடவடிக்கைகளின் மூலம் தமிழகம் மருத்துவத்துறையில் மகத்தான சாதனைகளை படைத்து வருகிறது. இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.இரா.சின்னத்தம்பி, ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.சந்திரசேகரன், கூட்டுறவு சங்கத்தலைவர் வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் பி.சாம்பசிவம், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட அலுவலர் பாண்டியராஜன், மருத்துவர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**